Regional Bulletin / Puducherry / Tamil Script / 17.07-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 17.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

உலக பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் மேக் இன் இந்தியாவின் வெற்றிக் பயணத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 22 ஆம் தேதி தொடங்குவதை ஒட்டி, அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சிகளுக்கு வேளாண் துறை முக்கிய பங்களிக்கும் மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய பெருமக்களால் இன்று மொகரம் அனுசரிக்கப்பட்டது.

மோடி 1 (18)

உலக பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் மேக் இன் இந்தியாவின் வெற்றிக் பயணத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். மேக் இன் இந்தியா இயக்கம் எவ்வாறு இந்தியாவின் பொருளாதாரத்தை உலக அரங்கில் கொண்டு செல்கிறது என்பது குறித்து சமூக ஊடகங்களில் அவர் தமது கருத்தை பகிர்ந்துள்ளார். இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு இந்திய மிதிவண்டிகளின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதை குறிப்பிட்டுள்ள பிரதமர், சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதையே இந்த வளர்ச்சி எடுத்துக் காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். பீகார் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட காலனிகள், ரஷ்ய ராணுவத்தில் பயன்படுத்தப்படுவதை சுட்டிக் காட்டியுள்ள பிரதமர், இந்திய தயாரிப்புகள் மீது வளர்ந்து வரும் சர்வதேச எதிர்பார்ப்புகளையே இது

எடுத்துக் காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு தடவாடங்கள் தொடர்பான சர்வதேச சந்தையிலும் இந்தியாவின் பங்களிப்பும், செல்வாக்கும் அதிகரித்து வருவதாகவும் பிரதமர் திரு மோடி தெரிவித்துள்ளார். நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உயர் தரத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது காஷ்மீரில் தயாரிக்கப்பட்ட கிரிக்கெட் மட்டைகளுக்கு அதிக தேவை

மோடி 2 (19)

இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்தியாவில் தயாரிக்கப்படும் கிரிக்கெட் மட்டைகள் இந்திய கலைஞர்களின் சிறந்த கைவினை திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதோடு, சர்வதேச கிரிக்கெட் சந்தையில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். குஜராத்தில் செயல்படும் கூட்டுறவு பால் நிலையமான அமுல் தனித்துவமான சுவைகளில் உலக நாடுகளுக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அதன் தயாரிப்புகள் தற்போது அமெரிக்காவில் அறிமுகப் படுத்தப்பட்டு, அங்கு வரவேற்பை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் அமைப்பு தற்போது உலகின் பல நாடுகளில் தடையற்ற டிஜிட்டல் பண பறிமாற்ற தலமாக செயல்படுவதையும் பிரதமர் சமூக ஊடகப் பதிவில் சுட்டிக் காட்டி உள்ளார். இந்த யுபிஐ தொழில்நுட்ப முன்னேற்றமானது பென்டெக் கண்டுபிடிப்புகளில் இந்தியாவின் தலைமையையும், உலகளாவிய டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் புரட்சியையும் ஏற்படுத்துவதற்கான பாதையை உருவாக்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட பிரமோஸ் ஏவுகணை இந்தியாவின் பாதுகாப்பு திறன்களையும், உலகளாவிய பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமித் ஷா (6)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில், போதை பொருள் தடுப்பு குறித்த தேசிய அளவிலான உயர் மட்ட ஆலோசனை கூட்டம் நாளை புதுடெல்லியில் நடைபெற உள்ளது. போதை பொருள் தடுப்ப நடவடிக்கைகளில் மத்திய மாநில அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும், அது தொடர்பான நடவடிக்கைகளை

ஒருங்கிணைப்பது குறித்தும் இக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடர் (10)

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 22 ஆம் தேதி திங்கட்கிழமை தொடங்குவதை ஒட்டி, 21 ஆம் தேதி அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இரு அவைகளும் சுமுகமாக நடைபெற அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பை இக் கூட்டத்தின் போது மத்திய அரசு கோர உள்ளது. இந்த பட்ஜெட் கூட்டத் தொடரானது அடுத்த மாதம் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. நடப்பு நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வரும் 23 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்ய உள்ளார். பிரதமராக திரு நரேந்திர மோடி 3 ஆவது முறையாக பொறுப்பெற்ற பிறகு நடைபெறும் முதல் பட்ஜெட் கூட்டத் தொடர் இது என்பது குறிப்பிடத் தக்கது.

வேளாண் அமைச்சர் (12)

வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சிகளுக்கு வேளாண் துறை முக்கிய பங்களிக்கும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் 96 ஆவது நிறுவன மற்றும் தொழில்நுட்ப தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், இந்திய பொருளாதாரத்தின் உயிர் மூச்சாக வேளாண் துறையும், அதன் முதுகெலும்பாக உழவர் பெருமக்களும் விளங்குவதாக தெரிவித்தார். விவசாயத்திற்கும், விவசாயிகளின் நலனுக்கும் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை எட்டுவதற்கு மத்திய அரசு முழு மூச்சுடன் செயல்பட்டு வருவதாக கூறினார்.

*மன்சுக் மாண்டவியா* (12)

நாட்டின் வலுவான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில் இளைஞர்களின் திறமைகளை அங்கீகரித்து மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லியில், தேசிய இளைஞர் விருது மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட விருது பெற்றவர்களுடன் கலந்துரையாடிய மத்திய அமைச்சர், இளைஞர்களின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதை உறுதி செய்யும் வகையில், இளைஞர்களுக்கும், அமைச்சகத்திற்கும் இடையே தொடர்ச்சியான தகவல் பறிமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கூறினார். மை பாரத் தளத்தை மேலும் மேம்படுத்துவது குறித்த ஆலோசனைகளை வழங்கலாம் என்றும் இளைஞர்களை திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

*நட்டா1* (17)

மருந்து பொருட்கள் தொடர்பான உற்பத்தி துறையில் இந்தியா உலக அளவில் முன்னனி நாடாக மாறுவதற்கு சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மருந்துகள், அழகு சாதன பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களை முறைப்படுத்துதல் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் தலைமை ஏற்று பேசிய அவர், தொழில்நுட்பத்தில் மேம்பாடு, எதிர்கால தேவைக்கு ஏற்ற அணுகுமுறை, உயர்ந்த தரம் போன்றவற்றை நோக்கமாக கொண்ட உற்பத்தி முறையே தற்போதைய தேவையாக உள்ளது என்றார்.

மருந்துகளை உற்பத்தி செய்வதிலும், ஏற்றுமதி செய்வதிலும் இந்தியா முன்னனியில் இருப்பதை சுட்டிக் காட்டிய திரு நட்டா, இந்திய மருந்துகள் உலக தரத்தில் இருப்பதை உறுதி செய்யும் வகையில், தேசிய மருந்துகள்  தர கட்டுப்பாட்டு அமைப்பு தொடர் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்றார். மருந்து பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் எளிதாக வணிகம் செய்வதை உறுதி செய்யும் வழிமுறைகளை உருவாக்குவதில் அரசு கவனம் செலுத்தும் என்றும் திரு நட்டா தெரிவித்தார்.

நட்டா 2 (6)

மருந்துகள், அழகு சாதனை பொருட்கள் தொடர்பான இந்த ஆலோசனை கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பின் தலைமை இயக்குநர் டாக்டர் ராஜீவ்சிங் ரகுவன்ஷி, மத்திய மருந்துகள் தர கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் மத்திய சுகாதார அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முர்மு (7)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பதவியேற்ற முதல் வருடத்தில், அவர் ஆற்றிய 75 முக்கிய உரைகள் அடங்கிய, விங்ஸ் டூ அவர் ஹோப்ஸ் பகுதி -1 என்ற புத்தகம் நாளை புதுடெல்லியில் வெளியிடப் படுகிறது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் முன்னிலையில், மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் இந்த புத்தகத்தை வெளியிடுகிறார். இந்த புத்தகம் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகிறது.

மொகரம் (9)

இஸ்லாமிய பெருமக்களால் இன்று மொகரம் அனுசரிக்கப்பட்டது. நபிகள் நாயகத்தின் பேரன் ஹுசேன் அலியின் தியாகத்தை குறிக்கும் வகையில், இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளை ஒட்டி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாஹியா ஊர்வலங்கள் நடைபெற்றன. பிரசித்திப் பெற்ற நாகப்பட்டினம் நாகூர் தர்காவில் வழக்கமாக நடைபெறும் மொகரம் சிறப்பு தொழுகை இன்று காலை நடைபெற்றது. டெல்லியில் உள்ள நிஜாமுதின், ஓக்லா மற்றும் மெக்ராலி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மொகரம் ஊர்வலங்கள் நடைபெற்றன. கர்பலா தியாகிகளின் உன்னத தியாகத்தை எடுத்துக் காட்டும் வகையில், மதக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்கு வங்கம் (10)

மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தலைவர்கள் அம்மாநில ஆளுநர் திரு ஆனந்த் போஸ் குறித்து அவதூறான மற்றும் தவறான தகவல்களை சமூக வலைதளங்களில் பதிவிடக் கூடாது என்று கொல்கத்தா உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி திரு கிருஷ்ணாராவ் அடுத்த மாதம் 14 ஆம் தேதி வரை இந்த தடை நீடிக்கும் என்று தமது இடைக்கால உத்தரவில் தெரிவித்தார். அரசியல் சாசன அடிப்படையில் அமைந்துள்ள ஆளுநர் பதவியில் இருப்பவர்கள் மீது தனிப்பட்ட முறையில் அவதூறாக பேசுவதை அனுமதிக்க முடியாது என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வானிலை (12)

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடல் பகுதியில் நாளை மறுநாள் வாக்கில், புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்றும் நாளையும், தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் குமரி கடல் பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே, 55 கிலோ மீட்டர் வேகத்திலும் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், வரும் 21 ஆம் தேதி வரை மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா (19)

ஜெனிவாவில் உள்ள சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த மனித உரிமைக் குழுவின் 4 ஆவது ஆய்வை இந்தியா வெற்றிகரமாக முடித்துள்ளது. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு வெங்கட்ரமணி சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோரின் தலைமையிலான இந்திய குழுவினர் இந்த பணியை வெற்றிகரமாக முடித்துள்ளனர். வெளியுறவுத் துறை செயலர் திரு பவன் கபூர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், சமூக நீதித்துறை, தகவல்-

தொழில்நுட்பத்துறை, சிறுபான்மை விவகாரங்கள் துறை, பழங்குடியினர் நலத்துறை, உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களை சேர்ந்த பிரதிநிதிகளும் இந்த குழுவில் இடம் பெற்றிருந்தனர். இந்த மனித உரிமைக் குழுவின் ஆய்விற்கு உதவும் வகையில் 18 பேர் கொண்ட நிபுணர்களும் பங்கேற்றனர். ஜெனிவாவில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது, பல்வேறு துறைகளில் மனித உரிமையை நிலை நாட்ட இந்தியா மேற்கொண்டு வரும் உறுதிப்பாடு குறித்த தகவல்களை குழுவினர் எடுத்து கூறினர். இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, சர்வதேச மனித உரிமைக் குழுவானது இந்தியாவின் பாரம்பரியத்தையும், மரபுகளையும் பாராட்டியதோடு, பன்முக தன்மை கொண்ட இந்தியாவில் காணப்படும் அகிம்சை வழிமுறைகள் குறித்த மனிதாபிமான மாண்புகள் போற்றத் தக்கவை என்றும், பாராட்டு தெரிவித்தது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலக பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் மேக் இன் இந்தியாவின் வெற்றிக் பயணத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 22 ஆம் தேதி தொடங்குவதை ஒட்டி, அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சிகளுக்கு வேளாண் துறை முக்கிய பங்களிக்கும் மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய பெருமக்களால் இன்று மொகரம் அனுசரிக்கப்பட்டது.